Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 336

சனிக்கிழமை 28 ஒக்ரோபர் 2023

ஐப்பசி 11 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை நிர்மாணித்ததன் அவசியம் என்ன?

## யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கேட்கிறது இலஞ்ச ஊழல் ஆணைக்குழு

### தூபியை அகற்றும் சதிநடவடிக்கைக்கு முன்னோட்டமா?

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள முள்ளவாய்க்கால் நினைவுத் தூபியை நிர்மாணிக்கவேண்டிய அவசியம் குறித்து விளக்கமளிக்குமாறு இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சாற்றுதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கோரியுள்ளது. »11

யாழ்.பல்கலையிலுள்ள

## 'மே18' தூபிக்கு ஆபத்து; ஆராய வருகிறது குழு!

யாழ்ப்பாணம், ஒக்.28
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள 'மே 18' நினைவுத் தூபி தொடர் »11

ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு

## சிங்கள ஊழியர்கள் யாழ். பல்கலைக்கு!

முன்னுரிமை கொடுக்குமாறும் அழுத்தம்

யாழ்ப்பாணம், ஒக்.28
ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் »11

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கூட்டத்தில் நேற்றுக் கைகலப்பு!!!

### 7 பேர் கைது

வவுனியா, ஒக். 28
வவுனியாவில் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கக் கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மாரிடையே ஏற்பட்ட கைகலப்புத் தொடர்பாக 7பேர் வவுனியா பொலிஸாரால் கைது »11

## இன்று சந்திர கிரகணம்

கொழும்பு, ஒக். 28
இன்று சந்திர கிரகணம் நிகழ உள்ளதாகவும் இதனை நாட்டின் பல பகுதி »11

## ஜனாதிபதி, பிரதமருக்கு சொந்த வீடு இல்லையாம்

ரணிலே நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28
நானும் பிரதமரும் சகபாடிகள். எங்கள் இருவருக்கும் சொந்த வீடுகள் இல்லை. நான் தற்காலிக வீட்டிலேயே இருக்கிறேன். நாம் கடந்த »11

## திருட்டுச் சந்தேகநபர் கைது: 35 பவுண் நகைகள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 28
வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளிலுள்ள வீடுகளில் யாருமில்லாத பகல்வேளைகளில் நகைகளைத் திருடிய பிரதான சந்தேக »09

## ஆசிரியர்கள் மீதான தாக்குதல்: கண்டித்து நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 28
பத்தரமுல்லையில் ஆசிரியர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணம், வவுனியா உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் நேற்றுப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. »09

## கல்லுண்டாய் விபத்தில் கீரிமலைவாசி உயிரிழப்பு

யாழ்., ஒக். 28
கல்லுண்டாயில் நேற்றுமுன்தினம் இரவு சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார் »09

மின்சாரம் தாக்கி

## முல்லைத்தீவில் முதியவர் சாவு!

முல்லை., ஒக். 28
மின்சாரம் தாக்கி 69 வயது பூசகர் ஒருவர் உயிரிழந்துள்ளார். முல்லைத்தீவு, மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் உள்ள விநாயக »09

## அடாத்தாகப் பிடித்த அரச காணிகள் அதனைப் பிடித்தவருக்கே வழங்கப்படும்

கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28
அனுமதியின்றி அரச காணிகளில் சிலர் வசிக்கின்றனர். அவர்களின் காணிகளைக் கையகப்படுத்தி, அவர்களை அதேகாணிகளில் சட்டரீதியாகக் குடியமர்த்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துவருகிறோம். அரசகாணிகளில் அனுமதியின்றி வசிப்பவர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து தமது இருப்பை சட்டரீதியாக்கிக்கொள்ள முடியும் - இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற »09

## அம்பிட்டிய சுமண தேரரை ஏன் கைது செய்யவில்லை?

சுமந்திரன், மனோ, வேலுகுமார் எம்.பி.க்கள் கண்டனம்

கொழும்பு, ஒக். 28
மட்டக்களப்பு மங்களராமய அம்பிட்டிய சுமண தேரர் பகிரங்கமாக தமிழ் மக்களை »09



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவக மக்களின் தீராத போக்குவரத்து அவலம்

**யாழ்ப்பாணம், ஒக். 28**
**நெடுந்தாரகை, வடதாரகை, குமுதினி ,எழுதாரகை படகுகள் தொடர்ச்சியாக சேவையை வழங்குவதில் கோளாறுகளை எதிர்கொண்டுள்ள நிலையில் இது குறித்து யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.**

இது குறித்து கருத்துத் தெரிவித்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாணப் பணிப்பாளர் குறூஸ், குமுதினிப்படகில் இயந்திரக்கோளாறு காணப்படுகின்றது. இருப்பினும் அது சேவைக்குத் திரும்புகின்றது. தொடர்ச்சியாக இயக்குவது சந்தேகத்துக்கு இடமாக உள்ளது. கொழும்பிலிருந்து வருகை தரும் விசேட நிபுணர் குழுவின் மதிப்பீட்டின் மூலமே இறுதி முடிவை எடுக்கலாம். எழுதாரகை சொகுசு படகாகக் காணப்படுகின்றது. தற்பொழுது காங்கேசன்துறை இறங்குதுறையில் தரித்து நிற்கின்றது. 2020 ஆம் ஆண்டுடன் இதன் சேவை நிறுத்தப்பட்டது. இதனைச் சீர்செய்வதற்கு சுமார் 10.3 மில்லியன் ரூபா செலவாகும் என கடற்படை திட்ட முன்மொழிவொன்றை சமர்ப்பித்துள்ளது. இதனை பகிரங்க அறிவித்தல் மூலம் சுற்றுலாத்துறைக்குப் பயன்படுத்தலாம்.

வடதாரகைக்கு பரிசோதனையை முன்னெடுக்க 95 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. இதேவேளை நெடுந்தாரகை படகில் துளை காணப்படுகிறது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை அனுமதி வழங்கினால் தாம் இதை சேவையில் ஈடுபடுத்தலாம் எனத் தெரிவித்தனர். எம்மால் பாதுகாப்புக் கருதி அதனை அனுமதிக்க முடிய வில்லை. மேலும் நெடுந்தாரகை படகுக்குச் சோதனையை முன்னெடுக்க 97 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது.

தற்பொழுது ஜனாதிபதி செயலகத்தால் தீவக போக்குவரத்துக்கான முழுமையான பொறுப்பும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் எதிர்காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பொறியியற் பிரிவு உருவாக்கப்பட்டு படகுகள் அங்கேயே திருத்தப்படவுள்ளன. 4 புதிய படகுகள் கொள்வனவு செய்வதற்கான முன்மொழிவு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது- என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், குமுதினிப் படகைத் திருத்துவதற்கு 2 கோடியே 20 இலட்சம் ரூபா செலவு செய்யப்பட்டும் அது தற்போதும் இயந்திரக் கோளாறுடன் உள்ளது. நெடுந்தீவு மீனவர்கள் அந்தப் படகை ஒரு கோடியே 60 இலட்சத்துக்கு திருத்தித் தருவதற்கு கோரிய போதும் அவர்களிடம் திருத்துவதற்கு பணத்தை வழங்காது வேறு நிறுவனங்களுக்கு வழங்கி பணம் வீண் விரயமானது தான் மிச்சம். பழைய படகை இரும்புக்கு விற்றுவிட்டு புதிய படகைக் கொள்வனவு செய்வது தான் சரியாக இருக்கும்- என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த நெடுந்தீவு பிரதேச செயலர், சங்கம் ஒன்று படகுச் சேவையை நடத்தி வருகின்றது. இரு வழிக்கட்டணமாக 400 ரூபா அறவிடுகின்றனர். மேற்கூரையற்ற படகே இவ்வாறு சேவையில் ஈடுபடுகின்றது. மழை காலத்தில் அதில் பயணிக்கமுடியாது- என்றார்.

இறுதியாகக் கருத்துத் தெரிவித்த ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, மிரிச பகுதியில் 50 பேரை ஒரே தடவையில் ஏற்றிச் செல்லக் கூடிய வாடகைப் படகு இருப்பதாகவும் அதைச் சேவையில் ஈடுபடுத்துவது பற்றி ஆராயலாம்- என்றார். (ஓ-125)

## இராணுவ சலூன்களை மூடுவதற்கு நடவடிக்கை

*அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.28
யாழ்ப்பாணத்தில் இயங்கும் இராணுவ சிகையலங்கார நிலையங்களை நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், நவிண்டில், செம்பியன்பற்று ஆகிய இடங்களில் இராணுவத்தினர் சிகையலங்கார நிலையங்களை நடத்தி வருகின்றனர். எமது பொதுவிடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமைகளிலும் அவர்கள் கடைகளைத் திறக்கின்றனர். இது எமக்குப் பொருளாதார ரீதியாகப் பிரச்சினையை ஏற்படுத்துகின்றது. எமக்கு சமூக நலக் கொடுப்பனவுகளான சமுர்த்தி மற்றும் இதர கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதில்லை என்று கூட்டத்தில் கலந்துகொண்ட சிகை அலங்கார சங்கங்களின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இராணுவத்தினரால் நடத்தப்படும் சிகையலங்கார நிலையங்களை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார். (எ-125)

## தகவல்தரப் பின்னடிக்கும் மதுவரித்திணைக்களம்!

*சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு*

கொழும்பு, ஒக்.28
தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவலுக்கு இன்னமும் தகவல் வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.

யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சட்டவிரோத மதுபான நிலையங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

யாழ்ப்பாணத்தில் எத்தனை மதுபான விற்பனை நிலையங்கள் உள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட மதுவரித்திணைக்களப் பொறுப்பதிகாரியிடம் தகவல் அறியும் சட்டம் மூலம் கேட்டேன். இதைக் கோரி பல நாள்கள் கடந்துள்ளபோதும் இன்னமும் எனக்குத் தகவல் வழங்கவில்லை.

கடந்த மாதமும் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தத் தகவலைக் கேட்டிருந்தார். இந்த முறையும் கேட்கின்றார். ஆனால் உங்களுக்கும் பதில்கிடைக்கப்போவதில்லை- என்றார். (எ-125)

## மாணவன் காயம்!

யாழ்ப்பாணம், ஒக். 28
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் இரண்டு மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒரு மாணவனின் தலையில் காயம் ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

காயமடைந்த மாணவனின் உறவினர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைக்குச் சென்று அங்கு வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பாடசாலை வளாகத்தில் பதற்றம் ஏற்பட்டது என்றும் தெரியவருகின்றது. (ம-27)

## "நான் சொல்வதே நடக்கும் பிக்குவின் கதை செல்லாது"

*அமைச்சர் டக்ளஸ் காட்டம்*

யாழ்ப்பாணம், ஒக்.28
நான் சொல்வதுதான் இங்கே நடக்கும். பிக்குவின் கதையைக் கருத்தில் எடுக்க முடியாது என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நெடுந்தீவு பயணிகள் படகுச் சேவை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டபோதே அமைச்சர் இவ்வாறு கடுந்தொனியில் தெரிவித்தார்.

நெடுந்தீவு பயணிகள் படகுச்சேவை தொடர்பாகக் கூட்டத்தில் சுட்டிக்காட்டிய நெடுந்தீவுப் பிரதேசசெயலர், நயினாதீவு பிக்கு தனது படகை குறிகாட்டுவான் இறங்குதுறையில் நெடுந்தீவுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தரித்து நிறுத்துகின்றார். இதனால் நெடுந்தீவு செல்லும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். கடற்படையினர் பிக்குவுக்குப் பயந்து எதுவும் கூறுவதில்லை என்று தெரிவித்தார்.

கூட்டத்தில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம், நீங்கள் என்ன சொன்னாலும் பிக்கு கேட்கமாட்டார் எனக் கூறினார்.

அதையடுத்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நான் சொல்வதுதான் இங்கே நடக்கும், பிக்கு சொல்வது அல்ல. அவரது படகு இனியும் அந்த இடத்தில் தரித்து நின்றால் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வேன். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (நாளை) அங்கு நேரில் சென்று பார்ப்பேன் என்று கடும் தொனியில் குறிப்பிட்டார். (எ-125)

## கடல்சார் குற்றத் தடுப்பு அலுவலகம் மன்னாரில்

மன்னார், ஒக். 28
மன்னார் மாவட்டத்தில் கடற்பகுதிகளை மையமாக வைத்து மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல், போதைப்பொருள் வியாபாரம், உள்ளிட்ட கடல்சார் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்காக மன்னார் மாவட்டத்தில் புதிய அலுவலகம் ஒன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய பொலிஸாரின் நிதியொதுக்கீட்டின் கீழ் இந்த அலுவலகம் அமைத்து [illegible] அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அவுஸ்திரேலியாவின் பொலிஸ் அதிகாரி ரொபேர்ட் வின்சன், குற்றப்புல [illegible] பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரனசிங்க, வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் விஜயசேகர மற்றும் கடல்சார் குற்றத்தடுப்பு பிரிவு பணிப்பாளர் சமரக்கோன் பண்டரா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பேரில்

# விடுவிக்கப்பட்ட காணிகளை அபகரிப்பதற்கு முயற்சிகள்!

## காணி உரிமையாளர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்.28

**யாழ்ப்பாணம், காங்கேசன்துறை மாங்கொல்லைப் பகுதியில் அண்மையில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட தனியார்காணி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணி என அதிகாரிகள் உரிமைகோரியமையால் காணி உரிமையாளர்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டது.**

'கடந்த 33 வருட காலத்துக்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த மாங்கொல்லை பகுதியில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியதை அடுத்து, அப்பகுதி மக்கள் தமது காணிகளை அடையாளப்படுத்தி, எல்லைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட சிலர் அப்பகுதிக்கு வந்து, இந்தக் காணிகள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு உரியது. நாம் கடந்த 40 வருட காலத்துக்கு முன்பே காணி உரிமையாளர்களிடம் இருந்து காணிகளைக் கொள்வனவு செய்து விட்டோம்' எனத் தெரிவித்தனர். 'காணியை நாம் யாருக்கும் விற்கவில்லை. இது எங்களின் காணிகள். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான காணி எமது காணிகளில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள காணிகளே' என காணி உரிமையாளர்கள் பதிலுக்குத் தெரிவித்தனர்.

அதனை ஏற்கமறுத்த அதிகாரிகள், 'இந்த காணிகளையும் தமது நிறுவனம் கொள்வனவு செய்து விட்டதாகத் தெரிவித்ததுடன், இது உங்கள் காணிதான் என்பதற்கு எங்களுக்கு உறுதியை காண்பித்து உறுதிப்படுத்துங்கள்' எனக் கூறினர். 'அதற்கு காணி உரிமையாளர்கள் நாங்கள் எதற்கு உங்களுக்கு உறுதி காட்ட வேண்டும்? உங்களின் உறுதிகளை பரிசீலித்து உங்கள் காணி எங்கே இருக்கிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டியது உங்கள் பொறுப்பு' என்று தெரிவித்தனர். அதனை அடுத்து, 'இந்தக் காணிகளையும் கொள்வனவு செய்து விட்டோம். அதற்கான உறுதிகள் எங்களிடம் உள்ளன. ஆதாரங்களுடன் வருகிறோம்' எனத் தெரிவித்துவிட்டு அவர்கள் அங்கிருந்து சென்றனர். (ம-20-26-125)

## காங்கேசன்துறை - ஊரவில் வீதி சீரமைப்பு இடைநடுவில் நிறுத்தம்

### அந்தப்பகுதி மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாணம் வலி. வடக்கு பிரதேசசபை ஆளுகைக்கு உட்பட்ட காங்கேசன்துறை ஊரவில் வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் நிதிபோதாது என இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

காங்கேசன்துறை - ஊரவில் வீதி 28 வருடங்களுக்கு மேலாக இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் காணப்பட்டது. 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் அந்தப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

இதன்போது குறித்த வீதியை புனரமைத்துத் தர வேண்டும் என்று உரிய தரப்பினிடம் 3 வருடங்களுக்கு மேலாக தொடர் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆயினும் சுமார் 300 மீற்றர் நீளமான வீதியில் 250 மீற்றர் தூரம் வரை மாத்திரமே வீதி செப்பனிடப்பட்டது. மிகுதி குறையாக விடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் வினவியபோது 'வீதிக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் குறித்த தூரம் வரை மட்டுமே புனரமைப்புச் செய்ய முடிந்துள்ளது. மிகுதித் தூரத்தை புனரமைப்புச் செய்ய நிதிபோதாது' என்று கூறப்படுகிறது.

வீதியை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்போது வீதியின் நீளம் அளக்கப்பட்டல்லவா நிதி ஒதுக்கப்படவேண்டும். இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம்செலுத்தி குறித்த வீதியை முழுமையாக புனரமைத்து தர நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-26)

## இ.போ.ச.வுக்கு வருடம் 90 மில். ரூபா நட்டம்!

கொழும்பு, ஒக்.28

இலங்கைப் போக்குவரத்துச்சபைக்கு விபத்துகள் காரணமாக வருடாந்தம் 90 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

வருடாந்தம் சுமார் ஆயிரத்து 500 இலங்கைப் போக்குவரத்துச்சபைக்கு சொந்தமான பஸ்கள் விபத்துகளுக்கு உள்ளாகின்றன எனச் சபையின் விபத்து விசாரணை முகாமையாளர் எரந்த பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையில் இலங்கைப் போக்குவரத்து பஸ் விபத்துகளில் சிக்குண்டு 60 முதல் 70 வரையிலானவர்கள் உயிரிழக்கின்றமை அண்மைய அறிக்கையில் பதிவாகியுள்ளது. விபத்துக்குள்ளான பஸ்களை மீள இயக்குவதற்கு கால அவகாசம் அதிகம் தேவை என்பதால், வருடாந்தம் பல கோடி ரூபா நட்டம் ஏற்படுகின்றது.

விபத்துகளின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில், சாரதிகளுக்கு பாதுகாப்பான சாரதி நுட்பங்களுடன் கூடிய பயிற்சி வகுப்பு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் 300 ஓட்டுனர்க [illegible] ளன. [illegible]

## புதினம் தெரியுமோ?

ஏமாறுறவன் இருக்கும் மட்டும் ஏமாத்துறவனும் இருக்கத்தான் செய்வான். இண்டைக்கு நேற்றைக்கில்லை, கனகாலமாக இப்பிடித்தான் எல்லாம் நடக்குது. நேற்றைக்கு மூடநம்பிக்கையால என்னென்ன வேலையள் நடக்குது எண்டு பட்சி சொன்னதெல்லோ. இண்டைக்கும் அப்பிடி ஒரு மூடநம்பிக்கையைப் பாவிச்சு நடந்த ஒரு சம்பவத்தைத்தான் பட்சி சொல்லப்போகுது.

புன்னாலைக்கட்டுவனில இருக்கிற ஒருத்தர் தொட்ட தொண்டும் துலங்கேலை. எந்தத் தொழில் செய் தாலும் நட்டம் தான். இப்பிடி ஆள் நொந்துகெட்டு இருக்கேக்க "உரும்பிராயில ஒரு அம்மா இருக்கிறா. அவா கலை வந்து சொன்னால் எல்லாம் நடக்குது. அவாட்ட போனால் உன்ர பிரச்சினை எல்லாம் தீரும்" எண்டு ஒராள் இவருக்குச் சொல்லியிருக்கு. இவரும் "சரி ஒருக்கா அங்கையும் போய்ப்பாப்பம்" எண்டு உரும்பிராய்க்கு போயிருக்கிறார். இவரைப் பாத்தவுடனேயே அந்த அம்மாவுக்கு இவரின்ர நிலை விளங்கிட்டுது. கலையாடிக் கொண்டிருக்கேக்கையே "இந்தப் பூமரம் உப்பு விக்கப் போனா மழை பெய்யும், மா விக்கப் போனால் காத்தடிக்கும். என்னை நம்பி வந்திட்டாயெல்லோ, இனி எல்லாம் மாறும். தொட்டதெல்லாம் துலங்கும்" எண்டு சொல்லியிருக்கிறா. இவரும் "அதுக்கு என்ன வழி?" எண்டு கேட்டிருக்கிறார்.

"தெற்குப் பக்கமா இருந்து ஒரு நல்ல செய்தி வரும். அதோட எல்லாம் நல்லதாத்தான் நடக்கும்" எண்டு அந்த அம்மா சொல்லியிருக்கிறா. கலையாடி முடிஞ்சபிறகு இவரை அந்த அம்மா நிக்கச் சொல்லிப் போட்டு, ஒரு போன் நம்பர் குடுத்திருக்கிறா.

"தம்பி , அம்மாவை நம்பி வந்திட்டாய். உனக்கு வழி காட்ட வேண்டியது என்ர பொறுப்பு. இந்த நம்பரில உள்ளவர் எனக்கு நம்பிக்கையானவர். அவர் பொறுப் பெடுத்த ஒருத்தரையும் கனடாவில கரைசேர்க்காமல் விட்டதில்லை. நான் ஆருக்கும் அவரின்ர நம்பரை லேசில குடுக்கிறேலை. ஆனால் உனக்கு குடுக்கச் சொல்லி எனக்கு கட்டளை" எண்டு கடவுள் சொன் னதா அந்த ஏஜென்ஸிக்காரரோட, இந்தப் புன்னா லைக்கட்டுவன்காரரைத் தொடுத்து விட்டிருக்கிறா கலையாடுற அம்மா. பிறகு அந்த ஏஜென்ஸிக்கார னோட கதைச்சு டொக்கிமெண்ட்ஸோட 17 லட்சம் ரூபா காசையும் அனுப்பியிருக்கிறார் புன்னாலைக் கட்டுவன்காரர். அவ்வளவுதான். அதுக்குப் பிறகு போன் எடுத்தாலும் ஏஜென்ஸிக்காரன் எடுக்கி றேலை. ஆள் எங்க இருக்கெண்டும் தெரியாது. உரும்பிராயில இருக்கிற கலையாட்ட அம்மாவிட்ட போய்க் கேட்டால் "நானென்ன செய்ய? கடவுள் சொன்னதால நம்பர் தந்தன். அவன் ஏமாத்தினதுக்கு நான் எப்பிடிப் பொறுப்பேற்க ஏலும்?" எண்டு கேட்டிருக்கிறா. அதுக்குப் பிறகு அவர் பொலிஸுக்குப் போய், முறைப்பாடு செய்தபிறகு ஒருமாதிரி ஏஜென்ஸிக்காரன் நிட்டம்புவ எண்ட இடத்தில இருக்கிறதை பொலிஸ் மணந்து பிடிச்சு , அரெஸ்ட் பண்ணியும் போட்டினம். புன்னாலைக்கட்டுவன்காரருக்கு உண்மையிலேயே இப்ப நல்லகாலம் தான் போல, ஏனெண்டால் அந்த ஏஜென்ஸிக்காரன் முழுக்காசையும் குடுத்திட்டானாம். ஆனால் அந்த ஏஜென்ஸிக்காரனும், கலையாடுறவாவும் இப்பிடி கூட்டணி போட்டு கனபேரின்ர காசை ஆட்டையைப் போட்டிருக்கினம் எண்டும் கதை. அதையும் பொலிஸ் கண்டுபிடிக்கும் தானே. ஆனால் இப்பிடியான மூட நம்பிக்கையளில நீங்களும் மாட்டுப்பட்டுடாதையுங்கோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயனின் பரிசுக்குவியல்

நெதர்லாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இன்றைய (28.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

தினம் ஒரு பரிசு 24

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

மெகா பரிசு

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக (தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

# 'த்ரில்' வெற்றி தென்னாபிரிக்காவுக்கு

### பாகிஸ்தானுக்கு தொடரும் சோகம்



பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி ஒரு இலக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துக்கொ ண்டது. பாகிஸ்தான் அணி மயிரிழையில் வெற்றியை நேற்றுத் தவறவிட்டது.

பாகிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்க அணிகள் மோதிய ஆட்டம் சென்னையில் நேற்று இடம் பெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 46.4 பந்துப் பரிமாற்றங்களில் 270 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. அந்த அணி 141 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தாலும் மத்திய வரிசையும், பின்வரிசையும் அணியை ஓரளவுக்கு தூக்கி நிமிர்த்தின. அந்த அணி சார்பில் சகீல் 52, அணித் தலைவர் பாபர் அசாம் 50 ஓட்டங்களை அதிகபட்சம் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் சம்சி 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

271 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு சீரான இடைவெளியில் இலக்குகள் வீழ்த்தப்பட்டாலும் வேகமாக அந்த அணி துடுப்பெடுத்தாடியது. 206 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்த அந்த அணி 250 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்து தடுமாறத் தொடங்கியது. வெற்றிக்குத் தேவையான ஓட்ட எண்ணிக்கையைவிட அதிகளவான பந்துகள் மீதமிருந்தபோதும் இலக்குகள் கைவசம் இல்லாமையால் பாகிஸ்தானுக்கு வெற்றி வாகை வீசியது. இருப்பினும் இறுதி இலக்குக்காக களமிறங்கிய சம்சி கால்காப்பில் வாங்கிய பந்துக்கு கள நடுவர் ஆட்டமிழப்பு கொடுக்கவில்லை. பாகிஸ்தான் மூன்றாம் நடுவரிடம் முறையீடு செய்தது. அதில் பந்து 'லெக்ஸ்ரம்பில்' மட்டு மட்டாகப் பட்டுச் செல்வது போன்று இருந்தது. இதனால் களநடுவரின் தீர்ப்பு என்று மூன்றாம் நடுவர் அறிவித்தமையால் தென்னாபிரிக்கா ஆட்டமிழப்பிலிருந்து தப்பியது. பின்னர் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களால் தென்னாபிரிக்காவின் இறுதி ஜோடியை ஆட்டமிழக்கச் செய்ய முடியவில்லை. 16 பந்துகள் மீதமிருக்க தென்னாபிரிக்கா வெற்றியைப் பதிவு செய்தது. அந்த அணி சார்பில் மார்க்கம் 91 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் சகீன் அப்ரிடி 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக சம்சி தெரிவானார். (ஓ-5)

## இன்றைய ஆட்டங்கள்

அவுஸ்திரேலியா - நியூஸிலாந்து
இடம் : தர்மசாலா
நேரம்: மு.ப. 10.30

நெதர்லாந்து - பங்களாதேஷ்
இடம் : கொல்கத்தா
நேரம்: பி.ப. 02.00

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023

### புள்ளிப்பட்டியல்

| | அணிகள் | ஆட்டம் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நி.ஓ.வி |
|---|---|---|---|---|---|---|
| 1 | தென் ஆபிரிக்கா | 6 | 5 | 1 | 10 | +2.032 |
| 2 | இந்தியா | 5 | 5 | 0 | 10 | +1.353 |
| 3 | நியூஸிலாந்து | 5 | 4 | 1 | 8 | +1.481 |
| 4 | அவுஸ்திரேலியா | 5 | 3 | 2 | 6 | +1.142 |
| 5 | இலங்கை | 5 | 2 | 3 | 4 | -0.205 |
| 6 | பாகிஸ்தான் | 6 | 2 | 4 | 4 | -0.387 |
| 7 | ஆப்கானிஸ்தான் | 5 | 2 | 3 | 4 | -0.969 |
| 8 | பங்களாதேஷ் | 5 | 1 | 4 | 2 | -1.253 |
| 9 | இங்கிலாந்து | 5 | 1 | 4 | 2 | -1.634 |
| 10 | நெதர்லாந்து | 5 | 1 | 4 | 2 | -1.902 |

## தினம் ஒரு பரிசு நாள் 22 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| சி.சித்திராங்கி | - கொக்குவில் | ந.லோகராஜ் | - கட்டப்பிராய் |
| சி.மதுசன் | - மல்லாவி | இ.ராஜசந்திரன் | - யாழ்ப்பாணம் |
| சி.பிரகலாதன் | - வல்வெட்டித்துறை | எல்.மதுஷ்h | - கோப்பாய் |
| சா.ஆரணி | - வவுனியா | ஆர்.இராகவன் | - கேப்பாபிலவு |
| ப.சயந்தன் | - சண்டிலிப்பாய் | து.ராஜ்மோகன் | - நட்டாங்கண்டல் |
| எஸ்.அருள்ராஜ் | - கொடிகாமம் | சி.திவ்யா | - மன்னார் |
| சி.தர்சிகா | - கொடிகாமம் | து.இரிசானா | - வவுனியா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

நீ நடந்து போக பாதை இல்லையே
என்று கவலைப்படாதே,
நீ நடந்தால் அதுவே ஒரு பாதை.!!"
-அப்துல்கலாம்-

## கோட்டையைப் பெயர்க்கும் ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் அண்மையில் மேற்கொண்ட மாற்றம் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. ரணிலின் இந்த நகர்வு மிகக் கச்சிதமாக முன்னெடுக்கப்பட்டதொன்று. எல்லோரையும் பிரித்தாள்வதில் வல்லவரான ரணில் இங்கேயும் தனது கைவரிசையைக் காட்டத் தவறவில்லை. பொது ஜன பெரமுன என்ற கூட்டுக்குள் ஏற்கனவே ஏகப்பட்ட பிளவுகள். அந்தப் பிளவுகளை மேலும் கூர்மைப்படுத்தியிருக்கின்றார் ரணில்.

பெரமுனவின் எழுச்சி என்பது அசாதாரணமானது. 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித்தேர்தலில் அந்தக் கட்சி அறிமுகமாகி பெரும்பான்மையைத் தக்க வைத்தது. அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபயவை களமிறக்கி மிகப் பெரியதொரு வெற்றியையும் பெற்றுக்கொண்டது. கொரோனா நெருக்கடிக்குள்ளும் நாடாளுமன்றத் தேர்தலில் தனி ஒரு கட்சியாக மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றி பெற்றது. அசுர வேகத்துடன் பலமடைந்த அந்தக் கட்சி அதே வேகத்தில் சரிவையும் சந்தித்தது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் அதனால் தோன்றிய வரிசையுகமும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை நாட்டைவிட்டு ஓட வைத்ததுடன் அந்தக் கட்சியினரையும் மக்களிடத்திலிருந்து தள்ளி வைத்திருந்தது. மக்கள் முன்னால் செல்வதற்கே பெரமுனவினர் அஞ்சிய காலம் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தது.மக்களிடத்தில் எழுந்துள்ள கோபத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் தம்மை மீளக் கட்டியெழுப்புவதற்கும் அவகாசம் பெரமுனவுக்குத் தேவைப்பட்டது. அந்த அவகாசத்துக்கான காவலனாக ரணிலை, ராஜபக்சக்கள் தேர்ந்தெடுத்தனர். ரணிலுக்கு பிரதமர் பதவியை வழங்கினர். கோத்தாபய நாட்டைவிட்டு வெளியேறியதால் ஜனாதிபதியாகினார் ரணில். அவரது நீண்ட நாள் கனவு பின்கதவு வழியாக நிறைவேறினாலும் தனது ஆட்சியை தொடர்வதற்கும் அதைத் தக்க வைப்பதற்கும் அந்தக் காலப் பகுதிக்குள் தனது சொந்தக்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை வலுப்படுத்துவதற்கும் அவர் விரும்புகின்றார்.

பெரமுன என்ற கோட்டையை ரணில் கொஞ்சம் கொஞ்சமாக உடைத்து வருகின்றார். தம் கண்முன்னேயே பெரமுன என்ற கோட்டையின் கற்களை ஒவ்வொன்றாக ரணில் பெயர்த்துக்கொண்டிருப்பதை வேடிக்கை பார்ப்பதைத் தவிர ராஜபக்சக்களுக்கு வேறு வழியில்லை. ஒரு காலத்தில் நிறைவேற்றதிகாரத்தில் ராஜபக்சக்கள் கோலோச்சியபோது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஒவ்வொரு செங்கல்லாக பிடுங்கி எடுத்து தங்கள் அரண்மனையை அமைத்துக்கொண்டனர். அப்போது ரணில் எல்லாவற்றையும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார். 2006ஆம் ஆண்டு தேசிய அரசுக்கான ஒப்பந்தத்தை மஹிந்த, ரணிலுடன் மேற்கொண்டு சில தினங்களுக்குள்ளேயே ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 17 நாடாளுமன்ற உறுப்பினர்களை தன்னோடு அரவணைத்துக்கொண்டார். இப்போது ரணிலின் தருணம். பெரமுனவிலிருந்து நிமால் லான்சா தலைமையில் தனக்கான ஓர் அணியை உருவாக்கியிருக்கின்றார். மறுபக்கம் பெரமுனவின் தலைகளுக்கு அமைச்சுப் பதவிகளைக் கொடுத்து தன்னோடு அரவணைத்திருக்கின்றார்.

அமைச்சுப் பதவியைக் கேட்டு பெரமுனவினர் ரணிலை மிரட்டியபோதும் அதற்கும் அவர் அசரவில்லை. தற்போதைய அமைச்சரவை மாற்றத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை முன்னுரிமைப்படுத்தியிருக்கின்றார். இதனால் பெரமுனவினர் குறிப்பாக ராஜபக்சக்கள் சீற்றமடைந்திருக்கின்றனர். ரணில் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவரைப் பொறுத்தவரையில் நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்டத்தை பெரமுனவினர் தோற்கடித்தாலும் கவலைப்படப் போவதில்லை. நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துவதற்கும் அவர் தயாராக இருக்கின்றார். இப்போதைய சூழலில் நாடாளுமன்றத் தேர்தல் பெரமுனவினருக்கு வாய்ப்பாக இருக்காது. அதனால் திருடனுக்கு தேள் கொட்டியதைப்போன்று ரணில் செய்யும் எல்லாவற்றுக்கும் பொருமிக்கொண்டு பேசாமல் இருப்பதைத் தவிர வேறுவழியில்லை.

வேலியில் போன ஓணானை வேட்டிக்குள் விட்ட கதையாக ராஜபக்சக்களின் நிலை இருக்கின்றது.




## சரணடைந்தோர் பெயர்கள் வெளிப்படுத்தப்படவேண்டும்

### வலியுறுத்துகின்றது உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம்



**கொழும்பு, ஒக்.28**

**ஆள்கொணர்வு மனு வழக்கில் சட்டத்தரணிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டதைப் போன்று 2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி சரணடைந்தவர்களின் பட்டியலை ஒப்படைக்கவேண்டும் என 58 ஆவது படைப்பிரிவுக்குக் கட்டளையிட வேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் தாம் சிரத்தையுடன் செயற்படுவதை நிரூபிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.**

- இவ்வாறு யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுவரை வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோர் 125 பேர் அவர்களது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்துகொள்ளாமலே உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன. சர்வதேச நியமங்கள் மற்றும் உள்நாட்டில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் பிரகாரம் உண்மையைத் தெரிந்துகொள்வதற்கான தார்மீக உரிமை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உண்டு. இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கென இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்படும் பல்வேறு ஆணைக்குழுக்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியையோ அல்லது ஆறுதலையோ தரமாட்டா.

மாத்தளை மனிதப் புதைகுழி தொடர்பில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர்களால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்துக்கு இலங்கை அரசாங்கம் உடனடியாகப் பதிலளிக்கவேண்டும் - என்றுள்ளது. (எ-இ)

## ஐ.ஓ.சி.யின் அனுமதிநீடிப்பு

கொழும்பு, ஒக்.28

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நல்லுறவின் நிமித்தம் ஐ.ஓ.சி.யின் எரிபொருள் விற்பனை அனுமதிப்பத்திரம் இருபது ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஐ.ஓ.சி.நிறுவனம் இலங்கையில் 2044 ஆம் ஆண்டு வரை எரிபொருள் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (எ-6)

IOC
Lanka IOC

நாளை 29.10.2023 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி 12

சுபநேரம் : 09.03 - 10.33
ராகுகாலம் : 04.03 - 06.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாலயா நடனப் பள்ளியின் வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக்.28

கலாலயா நடனப் பள்ளியின் 18ஆவது ஆண்டு விழாவும், வாணி விழா மற்றும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கோண்டாவில் ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலய வளாகத்தில் ஆதித்தியாரமணசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற மூத்த உதவிப் பதிவாளர் கலைஞானச் சுடர் எஸ்.கே.என். தவராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். நிகழ்வில் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-66)

# மரண அறிவித்தல்

பிறப்பு 06 • 07 • 1948



இறப்பு 26 • 10 • 2023

திருமதி

## சரஸ்வதி சிவகுருநாதன்

அராலி வடக்கினை பிறப்பிடமாகவும், நல்லூர் வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிவகுருநாதன் நேற்றுமுன்தினம் (26.10.2023) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகரட்ணம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், க.சிவகுருநாதன் (ஓய்வு பெற்ற முகாமைத்துவ பீடாதிபதி, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்) அவர்களின் பாசமிகு மனைவியும், ஹரிகரன், தேஜோமயானந்தா, ஷாலினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், தியானா, மயூரி, திஷிகேஷன் ஆகியோரின் மாமியாரும், ஷியாமளன், ஷாத்வீகன், அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற இராஜேந்திரன், இராசையா, இந்திரன், காலஞ்சென்ற சகுந்தலா ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல.12, வைமன் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 220 3051

இல.12, வைமன் வீதி,
நல்லூர்.

(cs.52635 (AK - 1)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் ஊடாக நடாத்தும்

**தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி - 2023/2024 (அணி – I)**

தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

அனுமதிக்கான தகைமைகள் விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளில் ஏதாவது ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

01. யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினது தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைக்கான பிரவேச பரீட்சையிற் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

02. சைவப் புலவர் அல்லது சைவசித்தாந்த பண்டிதராயிருத்தல்.

அல்லது

03. க.பொ.த உயர்தரப்பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் தமிழ்மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல்.

அல்லது

04. க.பொ.த உயர்தர பரீட்சையில் எந்தவொரு பாடத்துறையிலாயினும் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கான தகுதி பெற்றிருத்தல்.

அல்லது

05. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அல்லது தேசிய கல்வியியற் கல்லூரி முதலான அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது நிறுவனம் ஒன்றில் பயிற்றப்பட்ட ஆசிரியராயிருத்தல்.

கற்கைநெறிக்கான காலம் - ஒரு வருடம் (இரண்டு பருவங்கள்)
கற்கைநெறி மூலம் - வார இறுதி நாட்களில் நேரடி வகுப்புக்கள்
விண்ணப்படிவம் - ரூபா 200.00

**விண்ணப்பிக்கும் முறை**


மக்கள் வங்கிக்கிளை கணக்கில் (கணக்கிலக்கம் 890012780003289 இல்) விண்ணப்படிவத்திற்கான கட்டணமாக ரூபா.200.00ஐச் செலுத்தி, (www.codl.jfn.ac.lk) தரவிறக்கம் செய்து பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பற்றுச்சீட்டினை இணைத்து உதவிப்பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரிக்குத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். (மாதிரி வைப்புச்சீட்டினை www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.) கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி - 2023/2024 (அணி - I ஐ)" எனக்குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 10.11.2023

பதிவாளர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 • 03 • 1935



இறப்பு 25 • 10 • 2023

## கதிரவேலு நடராஜா

(ராஜன் இரும்பக உரிமையாளர்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு நடராஜா கடந்த 25.10.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கதிரவேலு அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஏகாம்பரம் சிவபாக்கியம் அவர்களின் அன்பு மருமகனும், நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்புச் சகோதரனும், கம்ஸா, குணராஜன், கிரிஜா, பிறேமிளா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தில்லைநாதன், மாலினி, வரதராஜன், கணேசரட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும், சரண்யா, அர்ஜீன், பிரசன்னா, பிரவீனா, கஜன், ஜெகன், ராம், டனீஷியா, அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேரனும், ஆதிரா, தாரகை, வீரா, ரியா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
021 225 5387

Tc ஒழுங்கை,
மானிப்பாய்.

(cs 52639) (N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 • 09 • 1949



மறைவு 24 • 10 • 2023

## திருமதி மகேஸ்வரி தனபாலசிங்கம்

நீர்வேலி மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் மகேஸ்வரி அவர்கள் கடந்த (24.10.2023) செவ்வாய்க் கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் தனபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமார் நாகம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான இலங்கைவிநாயகம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பாக்கியம் தம்பதிரயின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற லோகநாயகி மற்றும் லோகராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், முருகதாசன் (கைதடி), ஜெயரூபா (கனடா), சுகரூபா (அவுஸ்திரேலியா), கோகுலதாசன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவஜீவா, தீபாரஞ்சன், உமாசங்கர், நிவேதா ஆகியோரின் அன்பு மாமியாரும், கேசவி, கேசவன், கேதுசன், வைஷ்ணவி, வைஷ்ணவன், பிரணவி, கர்ணிஷ், விஷ்ணு, அபிஷ்ணா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வட்சாலாவின் சிறிய தாயாரும், அருட்குமரனின் பெரியதாயாரும்,காலஞ்சென்ற வரதராஜன், ருக்மணி, சோதிமலர், குமுதினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்:
மகன் - முருகதாசன் (கைதடி)
மகள் - ஜெயரூபா (கனடா)
மகள் - சுகரூபா (அவுஸ்ரேலியா)
மகன் - கோகுலதாசன் (நோர்வே)

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.
021 205 4820

(cs.52633) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.
## சந்தைகள், இறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான
# கேள்வி அறிவித்தல் - 2024

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றிற்கு 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2023.10.30 - 2023.11.13 நண்பகல் 12.00 மணி வரை**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2023.11.13 பி..ப 2.00 மணி வரை**
**கேள்விதிறக்கும் திகதி :- 2023.11.13 பி.ப 2.30 மணி**

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

01. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. சங்கானை மரக்கறிச் சந்தைக்கு விண்ணப்பப் பத்திரம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் (கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள்) ஏதாவது ஒரு வங்கியில் தங்கள் பெயரில் 2023 நவம்பர் 13 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பிருந்து கேள்விப்பத்திரம் பெறும் போது ரூபா 200,000.00 க்கு குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரமாக வங்கி சேமிப்புப் புத்தகம் / வங்கிப் பிணைமுறி / வைப்புச் சான்றிதழ், தானியங்கி இயந்திர அட்டை இருந்தால் அதனையும் சமர்ப்பித்தல் வேண்டும். தானியங்கி இயந்திரம் அட்டை இல்லையாயின் அதனை வங்கி முகாமையாளரால் உறுதிப்படுத்த வேண்டும். சித்தியடையாத கேள்விதாரரது வைப்புச் சான்றிதழ் கேள்விதிறந்த மறுநாள் மீளளிக்கப்படும். சித்தியடைந்த கேள்விதாரரது வங்கி சேமிப்புப் புத்தகம் / வங்கிப் பிணைமுறி / வைப்புச் சான்றிதழ், தானியங்கி இயந்திர அட்டை என்பன கேள்வித் தொகையின் 1/3 பகுதியை அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மீளளிக்கப்படும்.

03. சங்கானை நவீன மீன் சந்தையில் கோழி இறைச்சிக்கடைக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் இச்சந்தை வளாகத்திற்குள் கோழி விற்பனை, கோழி உரித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

04. சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் மீன் சந்தையின் மீன் வெட்டும் இடத்தினது தூய்மைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் பொதுசுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய பராமரிப்பதுடன் தொடர்ந்து இதனைக் கண்காணித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.

05. பல்லசுட்டி சந்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் அதனை நடாத்துவதற்குரிய இடத்தினை தற்போது சந்தை இயங்கும் இடத்திலிருந்து 500m சுற்றுவட்டத்தினுள் தாமே தெரிவுசெய்தல் வேண்டும். மேலும் தெரிவு செய்த இடத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு பொதுச்சுகாதார பரிசோதகரின் சிபார்சுக்கு அமைவாகவே செயற்படவேண்டும். அத்துடன் தெரிவு செய்யும் இடத்திற்கான குத்தகை அல்லது வாடகை குத்தகையாளராலேயே கொடுக்கப்படவேண்டும்.

06. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

07. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர் களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

08. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், போதிய காரணங்களால் எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

09. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 2023 நவம்பர் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.

10. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

11. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.

12. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும்

13. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% உம், மீன், இறால், நண்டு, கணவாய் கிலோ ஒன்றிற்கு ரூபா 10.00 உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, விற்பனை செய்யும் இடத்திற்கு ரூபா 100.00 உம் மீன் வெட்டும் இடம் ஊடு ஒன்றிற்கு (5'X 3') ரூபா 150.00 அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது.

14. சந்தைகளில் விவசாயிகளினால் கொண்டுவரப்படும் சில நிலக்கீழ் உற்பத்திப்பொருட்கள் மற்றும் வாழைக்குலை தவிர்ந்த எந்தவொரு விவசாய உற்பத்திப்பொருட்களும் வியாபாரிகளினால் கொள்வனவு செய்யப்படும் போது எவ்விதமான கழிவுகளும் வழங்கும் நடைமுறை அனுமதிக்கப்படமாட்டாது.

15. வாகனப் பாதுகாப்பு நிலையத்தை குத்தகைக்கு பெறுபவர்கள் "ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம் 10/=" "உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் 20/=" என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும்.

16. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டத்தில் மீன், மரக்கறி, கோழி இறைச்சி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

17. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறவிடுமாறு அறிவிக்கப் படும் வரிகள் வாடகைத்தொகை மீள் மதிப்பீடு செய்யப்படின் அத்தொகையும் அறவிடப்படும்.

18. 2015.11.09 ஆம் திகதிய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

19. மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

### சந்தைகள், இறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான குத்தகை அட்டவணை - 2024-

| இல | சந்தைகள் இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கானை மரக்கறிச்சந்தை (வாகனத் தரிப்பிடம் தவிர்த்து) | —— | 11,365,750.00 | 30,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை நவீன மீன் சந்தை (வாகனத் தரிப்பிடம் தவிர்த்து) | —— | 2,618,000.00 | 20,000.00 | 1,000.00 |
| 03 | சங்கானை நவீன மீன் சந்தை வாகனத் தரிப்பிடம் | —— | 960,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 04 | சங்கானை கருவாட்டுக்கடை | 1,500.00 | 46,530.00 | 3,000.00 | 1,000.00 |
| 05 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 01 | 1500.00 | 229,900.00 | 3,000.00 | 1,000.00 |
| 06 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 02 | 1500.00 | 209,340.00 | 3,000.00 | 1,000.00 |
| 07 | மாட்டிறைச்சிக்கடை | 1500.00 | 2,003,760.00 | 20,000.00 | 1,000.00 |
| | **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சத்தியகாடு சந்தை (வாகனத் தரிப்பிடம் தவிர்த்து) | —— | 1,727,000.00 | 15,000.00 | 1,000.00 |
| 02 | சத்தியக்காட்டுச் சந்தை வாகனத் தரிப்பிடம் | —— | 96,000.00 | 3000.00 | 1,000.00 |
| 03 | சத்தியகாடு சந்தை கோழி இறைச்சிக் கடை | 1,300.00 | 165,000.00 | 3,000.00 | 1,000.00 |
| 04 | சத்தியகாடு சந்தை கருவாட்டுக் கடை | 1,300.00 | 34,675.00 | 3,000.00 | 1,000.00 |
| 05 | பல்லசுட்டி சந்தை | —— | 30,830.00 | 3,000.00 | 1,000.00 |
| 06 | மூளாய் சந்தை | —— | 100,000.00 | 3,000.00 | 1,000.00 |
| 07 | தொல்புரம் மத்திய சந்தை | —— | 27,850.00 | 3,000.00 | 1,000.00 |
| 08 | பொன்னாலை வாராந்தச் சந்தை | —— | 43,220.00 | 3,000.00 | 1,000.00 |
| | **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கரத்தை சந்தை | —— | 315,480.00 | 3,000.00 | 1,000.00 |
| 02 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | —— | 33,000.00 | 3,000.00 | 1,000.00 |
| 03 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 01 | 1,750.00 | 171,410.00 | 3,000.00 | 1,000.00 |
| 04 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 02 | 1,750.00 | 144,210.00 | 3,000.00 | 1,000.00 |
| | **அராலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அராலி, செட்டியார்மடம் சந்தை | —— | 28,250.00 | 2,000.00 | 1,000.00 |

**தலைமை அலுவலகம்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**2023.10.28**

**ச.பாலரூபன்.**
**செயலாளர்.**
**உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.**

### வலிகாமம் மேற்கு பிரதேசசபை - சுழிபுரம்
### கடைகளை வாடகைக்கு வழங்குதல் - 2024

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கடைகளை உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/46 ஆம் இலக்க 1980.12.11 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கு அமையவும் விலைமதிப்பீட்டுத் திணைக் களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைக்கு அமைவாகவும் வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | கடை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்க முடியாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | சுழிபுரம் நவீன சந்தைக் கடை இல. - 05 | 405,000.00 | 8,100.00 | 1000.00 |

**கேள்வி நடைமுறைக்கு மேற்குறித்த திகதிகள் பொருத்தமானது. மேலதிக நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் பார்வை யிடலாம்.**

**ச.பாலரூபன்.**
**செயலாளர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச் சபை, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.**
**2023.10.28.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து வகை குருதிகளுக்கும் யாழ். போதனாவில் தட்டுப்பாடு

## குருதிக்கொடையாளர்கள் முன்வருமாறு அழைப்பு

யாழ். போதனா மருத்துவமனையின் இரத்த வங்கியில் தற்போது அனைத்து வகைக் குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மருத்துவமனையின் இரத்த வங்கிப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

விபத்துகள், சத்திரசிகிச்சைகள், குருதிச்சோகை நோயாளர்கள், புற்றுநோயாளர்கள் மற்றும் குருதி தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் மருத்துவமனையில் அதிகரித்து வருகிறது.

நோயாளர்களுக்குத் தேவையான குருதியை எம்மால் வழங்க முடியாதுள்ளது. குருதி வங்கியால் விநியோகிக்கப்படுகின்ற குருதியின் அளவு கூடிக்கொண்டே செல்லும் நிலையில் குருதிக்கொடையாளர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுவதால் அனைத்து வகைக் குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இரத்த வங்கியில் சராசரி 330 'பைந்த்' குருதி குறையாமலிருக்க வேண்டும். தற்போது 238 பைந்த் குருதியின் அளவே கையிருப்பிலுள்ளது. இது ஆபத்தான நிலையாகும்.

இந்தநிலைமையைக்கவனத்தில் கொண்டு பொதுமக்கள் குருதிக் கொடையளிக்க முன்வர வேண்டும். குருதிக்கொடையளிக்க விரும்புவோர் 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு குருதிக் கொடையளிக்க முன்வாருங்கள் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ச-66-100)


## நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் எல்லாவிதமான இனத்தவர்களுக்கும் அரசாங்க வேலை அரச சார்பற்றவர்கள், இஞ்சினியர், டொக்ரர், ஆசிரியர்கள், எல்லா உத்தியோகத்தவர்களும் செவ்வாய் குற்றம் அற்றவர், செவ்வாய் உள்ளவர்கள், சூரியன், செவ்வாய் உள்ளவர்கள் எல்லோருக்கும் எம்மிடம் வரன்கள் உள்ளன. அவற்றை துரிதமாகவும் எம்மால் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு : வி.ஜெயந்தி
T.P:077 97 33 183

(CS 26667)A-1



## CHUNDIKULI GIRLS' COLLEGE JAFFNA

NEW ADMISSIONS - 2024
ENGLISH MEDIUM NURSERY

* For 3+ Classes (Girls only)
* Only limited vacancies
  Age : Born on or after 01.02.2020 and before 31.01.2021
* Applications close on 10th November 2023.
* Application forms (limited number) will be available at the College office from 1st November 2023.
* Interviews will be held soon after the submission of the applications.

Principal

Cr 40831 (AK.1)


# வேவில் சனசமூக நிலைய வாணிவிழா இன்று

யாழ்ப்பாணம், ஒக். 28

வேவில் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் வாணிவிழா இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு வேவில் பிள்ளையார் ஆலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

வேவில் விக்னேஸ்வரா சனசமூக நிலைய தலைவர் த. ஸ்ரீ தர்சன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக பல்நோக்கு அபிவிருத்திச் செயலணி திணைக்களம் மாவட்ட இணைப்பாளர் நவரட்ணம் மயூரரூபன்,

சிறப்பு விருந்தினராக சிதம்பாரா கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி விமலாதேவி சிவகுமார் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

இதன்போது வேவில் விக்னேஸ்வரா அறநெறி பாடசாலை மாணவர்கள் மற்றும் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறி பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ச)


# ரோஸ்மாஸ்ரர் அறிமுக செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக். 28

ரோஸ்மாஸ்ரர் சர்வதேச அமைப்பானது ஆங்கில மொழிமூலமான பேச்சாற்றல், தொடர்பாடல் விருத்தி, தலைமைத்துவ விருத்தி தொடர்பான பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

இவ்வமைப்பு தொடர்பான அறிமுகச் செயலமர்வு நாளை காலை 9.30 மணி தொடக்கம் 12 மணி வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அருகில் உள்ள திம்மர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பயனாளர்கள் வயது வேறுபாடு இன்றி கலந்துகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-இ)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 01.03.1939 — இறப்பு 31.10.2020

யாழ். மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட


### அமரர் முத்துவேலு தங்கராசா

ஆண்டு மூன்று ஆனாலும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும் - உம்
நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணி விளக்காய் ஒளிவீசி பிரகாசித்தீர்!
இன்று வேண்டித்துதித்தே இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

புகழேந்திநகர்,
மல்லாவி.
074 232 6861

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 09 . 1950 — மறைவு 24 . 10 . 2023

### பொன்னையா விக்னேஸ்வரன்
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

யாழ். வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் புகையிரத நிலைய வீதி, வைரவப்புளியங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட விக்னேஸ்வரன் அவர்கள் கடந்த (24.10.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

வவுனியா மாவட்டத்தில் கிராம அலுவலராக தன்னுடைய சேவையை 1974 ஆம் ஆண்டு தொடங்கினார். 1980 ஆம் ஆண்டில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மாற்றலாகி பல்வேறு கிராமங்களில் தன்னுடைய சேவையை தொடர்ந்தார். 2002 ஆம் ஆண்டில் மன்னார் மாவட்டத்திற்கு மாற்றலாகி தன்னுடைய சேவையை தொடர்ந்து அங்கு ஓய்வுபெற்றார். பின்பு IDM நிறுவனத்தில் கணினி தொழில்நுட்பவியலாளராக வேலைபார்த்து ஓய்வுபெற்றார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2023) காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூந்தோட்டம் இந்து மயானத்தில் பூதவுடல் தீயுடன் சங்கமிக்கும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
வி.நிரூபன் (0061447535754) Australia
அ.அன்ரு (0773111245) Sri Lanka
வி.நிரூபன் (0761292642) Sri Lanka

தகவல்:
குடும்பத்தினர்.

CR 40853)A-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 07 . 05 . 1932 — இறப்பு 22 . 10 . 2023

### திருமதி பாக்கியலச்சுமி காசிப்பிள்ளை

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலச்சுமி காசிப்பிள்ளை கடந்த (22.10.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்பு மனைவி யும், காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், யோகலட்சுமி (கனடா) அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் பாலசிங்கம், ஈஸ்வரி, பாலேஸ்வரன் (கனடா), பவளராணி ஆகி யோரின் அன்புத் தாயாரும், செல்வராணி, இந்திராணி, நவமலர், பரமானந்தம், சோதிலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், மதிகரன், கண்ணன், றமேஸ், ரஜீனா, பவித்திரா, தனு, தனுஷா, சிவதரன், காண்டீபன், மீறா, தமிழினி, மோகன்றாச், கார்திக், லோஜிக், கோபிக், சிவதர்சினி, சிவமுகுந்தன், சிவநந்தனன், சிவறாகினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

தொடர்பு:
Rani - 077 558 4627
S.K. பாலேஸ் -1416 8013219 (கனடா)

தகவல்:
குடும்பத்தினர்

(cs.52633) N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில் நேற்று 2 உணவகங்களுக்கு 'சீல்'

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாணம் மாநகரில் சுகாதார சீர்கேடு நிறைந்து காணப்பட்ட உண வகமும் சுகாதாரப் பிரிவினரின் அனுமதி பெறாது இயங்கிய உண வகமும் நீதிமன்றக் கட்டளையில் 'சீல்' செய்யப்பட்டு மூடப்பட்டன.

ஆரியகுளம் சந்தியில் அமைந் துள்ள பிரபல சைவ உணவகத்தில் வாடிக்கையாளருக்கு புழுவுடன் உணவு வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் பாதிக்கப்பட்ட யாழ்ப்பா ணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி, பணிமனையினருக்கு அறிவித்தார். விசாரணைகளை முன்னெடுத்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் உணவகம் பரி சோதிக்கப்பட்டது. உணவகத்தில் சுகாதாரச் சீர்கேடுகளை சீர் செய்ய அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. நேற்றுமுன்தினம் மீண்டும் யாழ்ப் பாணம் மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் தலை மையிலான குழுவினரால் உணவ கம் பரிசோதனை செய்யப்பட்டது. இதன்போது சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் எவையும் நிவர்த்தி செய்யப்படாமலே காணப்பட்டது. அதனால் பொதுச் சுகாதாரச் சட்ட விதிகளின் கீழ் அந்த உணவகத் தின் உரிமையாளர் மீது யாழ்ப்பா ணம் மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகரில் உரிய அனுமதி பெறப்படாமல் இயங்கிய மற்றோர் உணவகமும் பரிசோதிக் கப்பட்டது. அதுதொடர்பிலும் வழக் குத் தொடரப்பட்டது.

இரண்டு உணவகங்களுக்கும் எதி ரான வழக்குகள் மேலதிக நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தன. உணவகங்களின் குறை பாடுகள் சீர் செய்யப்பட்டு உரிய அனுமதியளிக்கும் வரை அவற்றை 'சீல்' செய்து வியாபார நடவடிக் கையை இடைநிறுத்த மன்றில் விண்ணப்பம் முன்வைக்கப்பட்டது. விண்ணப்பத்தை ஆராய்ந்த மேல திக நீதிவான் இரண்டு உணவகங்க ளையும் 'சீல்' வைத்து மூடுமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு கட்டளையிட்டார். (அ-ஒ-20-26)

# பலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக யாழ். முஸ்லிம்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 28

பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரி வித்து முஸ்லிம் மக்கள் கவனவீர்ப்பு போராட்டமொன்றை யாழ். ஐந்து சந்திப் பகுதியில் நேற்று மேற்கொண் டனர்.

நேற்று மதியம் இடம்பெற்ற ஜும்மா தொழுகையைத் தொடர்ந்து போராட் டம் ஐந்து சந்தி வரை பேரணியாகச் சென்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அனைத்து பள்ளிவாசல் சம் மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற போராட்டத்தில் சர்வதேச சட்டங்கள் இஸ்ரே லுக்கு பொருந்தாதா? அமெரிக்காவின் குழந்தை இஸ்ரேல் - தாக்குதலை உடன் நிறுத்து போன்ற வாசகங்கள் மும்மொழி களிலும் அடங்கிய அட்டைகள் போராட்டக் காரர்களால் தாங்கிப்பிடிக்கப்பட்டிருந்தன. (அ-ஒ.20)

# சாந்திகம் நிறுவன கூட்டம் 12ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஒக். 28

சாந்திகம் நிறுவனத்தின் விசேட பொதுக்கூட் டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாந் திகம் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

சாந்திகத்தின் எதிர்காலம், நிலைத்தன்மை மற்றும் அதன் நோக்கத்தை நிறைவேற்றுதல் அதன் தொடர்ச்சியான செயற்றிறன் ஆகி யவை தொடர்பில் இதன்போது விவாதிக்கப் பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஆசிரியர்கள்...

நாட்டில் உள்ள பாடசாலைகளுக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெ டுக்கப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை, பெலவத்தைப் பகுதி யில் கடந்த 24ஆம் திகதி ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்களால் முன்னெ டுக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியின் மீது பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைப் பிரயோகங்களை மேற்கொண்டிருந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே போராட்டங்கள் முன்னெடுக் கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் சென். சாள்ஸ் மகா வித்தியாலயம், யாழ். இந்து மகளிர் கல்லூரி, வவுனியா மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் என்பன வற்றின் முன்பாக போராட்டம் முன்னெ டுக்கப்பட்டது. (அ-ஒ-20-110-125)

## திருட்டுச்...

நபரைக் கைது செய்துள்ளதாகப் பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

காங்கேசன்துறை வீமன்காமத்தைச் சேர்ந்த சந்தேகநபரை காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்த துடன், அவரிடமிருந்து 35 பவுண் நகை களையும் மீட்டுள்ளதாகத் தெரிவித் துள்ளனர்.

நெல்லியடி அரச புலனாய்வுப் பிரி வின் தகவலினடிப்படையில் சந்தேக நபரை காங்கேசன்துறைப் பகுதியில் கைது செய்ததுடன் திருடிய நகைகளை விற்பனை செய்த சந்தேகத்தில் பெண் ஒருவரும், களவு நகையை வாங்கிய மைக்காக சுன்னாகத்தைச் சேர்ந்த நகைக் கடை உரிமையாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ-26)

## அடாத்தாகப்...

விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ் வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தின் மயிலத்தமடு, திவுலபத்தன பகுதியில் போருக்கு முன் னர் வசித்த மக்கள் போர் நிறைவடைந்த பின்னர் மீண்டும் அங்கு படிப்படியாக குடியமர ஆரம்பித்துள்ளனர். அந்தமக் கள் விவசாயிகள் மற்றும் கால்நடை விவசாயிகள் என இரு குழுக்களாக இருப்பதால் அப்பகுதி மேய்ச்சல் நில மாக மாறியுள்ளது.

மயிலத்தமடு பகுதியில் மீளக் குடிய மரும்போது, பொலநறுவை மற்றும் அம்பாறை பகுதிகளைச் சேர்ந்த பலரை மேலதிகமாக அழைத்து வந்துள்ளமை யால் அவர்களின் விவசாயச் செயற்பா டுகளைப் பாதுகாக்கும் வகையில் வெளி மாவட்டங்களில் இருந்து வந்திருப்போ ருக்கு தற்காலிக ஊக்குவிப்புத் தொகை யொன்றை வழங்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆயினும், அம்பாறை மற்றும் பொல நறுவை பகுதிகளிலிருந்து வந்தவர் களை அம்மாவட்டங்களிலேயே விரை வில் குடியமர்த்துவது குறித்தும் ஆராயப் படுகிறது.

அதேபோல், மயிலத்தமடு, திவுலபத் தன பகுதியில் போருக்கு முன்னர் வசித்த மக்கள் அவர்களுக்குச் சொந்த மான காணிகளில் மீள் குடியமர்த்தப்பட வேண்டியது கட்டாயமானது என ஜனாதி பதி வலியுறுத்தியிருக்கும் நிலையில், மகாவலி அமைச்சு அந்தப்பணியை சட்டரீதியாக முன்னெடுத்து வருகின்றது.

அதேநேரம் மகாவலி வேலைத்திட் டத்துக்காக கிழக்கின் கோரளைப்பற்று பகுதியிலிருந்து தமிழர்களும், நாவலடி பகுதியிலிருந்து முஸ்லிம்களும் அகற் றப்பட்டிருந்த நிலையில் இந்தப் பணிகள் இன, மத அடிப்படையில் அல்லாது சட்ட ரீதியாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. கிராமஅலுவலர்களிடத்திலிருக் கும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டே காணிகளைப் பகிர்ந்தளிக்கும் செயற் பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சிங்கள மக்களின் குடியிருப்புகள் அங்கிருந்து அகற்றப்படுகின்றன என்ற வகையில் முரண்பாடுகளைத் தோற்று விக்கும் கருத்துகளை வெளிப்படுத்தி வரும் தேரருக்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுப்பதற்கான அறிக்கைகளும் பொலிஸாரால் நீதிமன்றத்துக்குச் சமர்ப் பிக்கப்பட்டுள்ளன.

அதனால், மேற்படி மன்னெடுப்பு களின் போது சகல இனத்தவர்களுக்கும் இலங்கையர் என்ற வகையிலேயே சட் டம் நடைமுறைப்படுத்தப்படும் என்ப தோடு, அதுகுறித்து அநாவசியமாக கருத்துகளை வெளிப்படுத்த மூன்றாம் தரப்பினர் முற்படக்கூடாது - என்றார். (அ-ஒ-6-26-44)

## கல்லுண்டாய்...

என்பன மோதிக்கொண்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கீரிமலையைச் சேர்ந்த ஜோசப் சுதர் சன் (வயது - 36) என்பவரே உயிரிழந் துள்ளார்.

கல்லுண்டாயில் நேற்றுமுன்தினம் சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார் என் பன ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங் கம் மேற்கொண்டார். அராலி தெற்கைச் சேர்ந்த காரின் சாரதி மானிப்பாய் பொலி ஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள் ளார். (அ-ஒ-27-26)

## முல்லைத்தீவில்...

புரம் கிராமத்தில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டுடன் காணப்படும் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக மோட்டருக்கு மின்சாரம் இணைப்பை வழங்கும் போதே இவர் மின்சாரம் தாக்கி உயிரிழந் துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் நட்டாங்கண்டல் பொலிஸார் விசாரணையை மேற் கொண்டுள்ளனர். (அ-ஒ-19)

## அம்பிட்டிய...

வெட்டுவேன் என்று தெரிவித்துள்ள நிலையிலும் அவரை இதுவரை ஏன் கைது செய்யவில்லை என்று நாடாளு மன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந் திரன், மனோகணேசன், வேலுகுமார் ஆகியோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப் பினர் சுமந்திரன், பொலிஸ்மா அதிப ருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், கடந்த சில நாள்களாக மங்களராமய அம்பிட் டிய சுமண தேரரின் பகிரங்கமான அறிக் கைகள் ஊடகங்களில் மிக அதிக அள வில் விளம்பரப்படுத்தப்பட்டதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்பு கிறேன்.

அம்பிட்டிய சுமண தேரர், மட்டக்க ளப்பு மாவட்டத்தைச் சேர்ந்த எமது கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக் கியனையும், நாட்டின் தென்பகுதியில் வாழும் அனைத்துத் தமிழர்களையும் துண்டு துண்டாக வெட்டிவிடுவேன் என்று வெளிப்படையாக மிரட்டிச் சென் றுள்ளார்.

இது அப்பட்டமாக 2007ஆம் ஆண் டின் ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் 56ஆம் பிரிவு 3(1) மற்றும் (2)இன் கீழ் தண்ட னைக்குரிய குற்றமாகும். ஏன் பொலி ஸார் தேரருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை? - எனக் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அறிக்கை வெளியிட் டுள்ள மனோ கணேசன், அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு தனது தாயின் கல்லறை தொடர்பில் பிரச்சினை இருக் குமாயின், அதுபற்றி அவர் பொலிஸில் முறைப்பாடு செய்யவேண்டும். இதைவி டுத்து சண்டியனாக உருமாறி மனநோ யாளிபோல் நடுத்தெருவுக்கு வந்து, 'தமிழர்களைத் துண்டு துண்டாக வெட்டு வேன், கொல்லுவேன்' என்று கத்துவது எந்த வகையில் நியாயம்? இனக்குரோ தத்தை உருவாக்கி குழப்பத்தை உண்டு பண்ணும் இவரை ஒன்றில் கைது செய்து சிறையில் அடைக்கவேண்டும் அல்லது பித்துப்பிடித்து பிதற்றுவதாயின் அங்கொடையில் அடைக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தனது அறிக்கையில், சமூகத்தில் இனவாதத்தை விதைத்து நாடெங்கும் பரப்பி மீண்டும் இன முறுகலை தோற்று விப்பதற்காக தொடர்ச்சியாக அடாவடி தனத்தில் ஈடுபட்டுவரும் மட்டக்களப்பு, அம்பிட்டிய சுமணரத்ன தேரர் உடன் கைது செய்யப்படவேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருத்துவபீட மாணவர்களின் போராட்டம் விரட்டியடிப்பு

கொழும்பு, ஒக். 28
கொழும்பு தாமரைத் தடாகம் அருகே போராட்டத்தில் ஈடுபட்ட மருத்துவபீட மாணவர்கள் மீது பொலிஸாரால் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் என்பன நேற்று மேற் கொள்ளப்பட்டுள்ளன.
தனியார் நிறுவனங்களான லைசியம் வளாகம், என்.எஸ். பி.எம். பசுமைப் பல்கலைக்கழகம் போன்றவற்றுடன் சதி செய்து நாட்டின் இலவசக் கல்வியை அழிக்க அரசாங்கம் முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டியே மருத்துவபீட மாணவர்க ளின் நடவடிக்கைக் குழு கொழும்பு விகாரமஹாதேவி பூங்கா வுக்கு அருகில் வீதிகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன், மொறட்டுவ, வயம்ப மற்றும் சப்ரகமுவ பல்கலைக் கழகங்களின் மருத்துவ பீடங்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களுக்கு உடனடியாகத் தீர்வு வழங்கவேண்டுமெனவும் போராட் டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் வலியுறுத்தினர்.
மாணவர்கள் தாமரை தடாகத்துக்கு அருகில் பொலிஸாரால் ஏற்படுத்தப்பட்ட தடுப்பு அணைகளை மீறி முன்னோக்கிச் செல்ல முற்பட்டபோதே பொலிஸாரால் கண்ணீர்ப் புகை மற் றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (அ-ஒ-இ)

# முழுநிலவு கலை நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 28
யாழ். மாவட்டச் செயலகத்தின் முழுநிலவு கலைவிழா இன்று சனிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி சபா மண் டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்டச் செயலாளர் சிவபால சுந்தரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் கொழும்புத்துறை ஹீதவாகினி இசைக்கல்லூரி மாண வர்களின் இசைச்சங்கமம் மற்றும் 'இன்றைய இளைய தலைமு றையின் தடம்மாறிய பயணத்துக்கு பெரிதும் காரணம் குடும் பமா? சமூகமா?' எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரிய கலா சாலை அதிபர் ச.லலீசன் நடுவராகப் பங்கேற்கும் விவாத அரங்கு உட்பட கலைஞர் ஆற்றுகைகள் சிறப்பிக்கவுள்ளன. (ச-9)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** தேவையற்ற செலவுகள் ஏற்ப டக்கூடும். உணவில் கவனமாக இருக்கவும். குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடி யுங்கள். முரு கப்பெருமானை வழிபட மகிழ்ச்சி கிட்டும்.

**மிதுனம்:** உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர் பாராத செலவுகள் ஏற்படக்கூடும். எதிர் பார்த்ததைவிட லாபம் குறைவு. அலைச்ச லும் செலவுகளும் ஏற்படும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடி யும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். செல வுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதக மாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவு களால் கையிருப்பு குறையும். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. பங்குதாரர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்னைகள் ஏற்ப டக்கூடும். பொறுமை அவசியம்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற் படுவீர் கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவை களை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். சங்கடங்கள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். குடும் பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்க வும். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பணியாளர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கவும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற் படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. விருப்பம் நிறைவேறும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும். வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடி யும். மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.


# மரண அறிவித்தல்

தோற்றம்
17.04.1944

## வள்ளியம்மை சுப்பிரமணியம்

மறைவு
27.10.2023



புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிட மாகவும் கொண்ட வள்ளியம்மை சுப்பிரமணியம் நேற்று (27.10.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - நல்லதங்கம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் ஆருயிர் மனைவியும், சறோஜினிதேவி (செல்வி - லண்டன்), ரஞ்சினிதேவி (மலர் - சுவிஸ்), சண்முகவடிவேல் (ஜேர்மன்), ராகினிதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பேரின்பநாயகம் (லண்டன்), ஸ்ரீபவன் (சுவிஸ்), தர்சினி (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் ஆருயிர் மாமியும், காலஞ்சென்றவர்க ளான கந்தசாமி, கனகலிங்கம் மற்றும் இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும், சுகந்தினி - தவச்செல்வன், வசந்தராஜ், திலீப்ராஜ் (லண்டன்), வசந்தகுமார் - லக்ஷிகா, சபேசன், சந்தோஷ் (சுவிஸ்), அகீஷன், சகீரன், அபிநாஸ் (ஜேர்மன்), யசிக்குமார் - சிந்துஜா, சதீஸ்குமார், யசிகா - பிரதீபன் (லண்டன்) ஆகியோரின் ஆருயிர் பேர்த்தியும், பிரவீன், ரியான், சஹானா, சச்சினா, ஆதிரா ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான சுபாரெத்தினம், அன்னம்மா, விசுவலிங்கம், திருநாவுக்கரசு மற்றும் இராசரெத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, அன்னலிங்கம் மற்றும் வசந்தி, அன்னலெட்சுமி, கமலாம்பிகை மற்றும் காலஞ்சென்றவர்களான கந்தையா, தம்பிஜயா, அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.36, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(7ம் வட்டாரம் - புங்குடுதீவு)
+94770649360

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26737) A:1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்கால்...

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைக்கப்பட்டமைதொடர்பில்ஆணைக் குழுவுக்குக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணையின் ஒரு அங்கமாகவே இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் விளக்கம் கோரப்பட்டுள்ளது. தூபி அமைக்கப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்க பல்கலைக்கழகத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரியை எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதி நேரில் சமுகமளிக்குமாறு பல்கலைக்கழகப் பதிவாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளவாய்க்கால் நினைவுத் தூபியை அமைப்பதற்காகப் பொது நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், அரச பல்கலைக்கழக வளாகத்தில் அனுமதி பெறப்படாமல் தூபி அமைக்கப்பட்டுள்ளது என்றும் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சாற்றுதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாகத் தூபி அமைக்கப்பட்டமை தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் கடந்த 19ஆம் திகதி விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். அதன் தொடர்ச்சியாக விடயம்சார் அறிவுடைய பொறுப்பு வாய்ந்த அதிகாரியொருவரின் வாக்குமூலமொன்றைப் பதிவுசெய்துகொள்ள வேண்டிய தேவையேற்பட்டுள்ளதால், கோரப்படும் ஆவணங்களுடன் எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி காலை 9.30 மணிக்கு அதிகாரி ஒருவரை அனுப்பிவைக்குமாறு ஆணைக்குழுவால் பதிவாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால்நினைவுச்சின்னத்தை நிர்மாணிக்கவேண்டியதன் அவசியத் தன்மை தொடர்பிலான அறிக்கையொன்று, பல்கலைக்கழக வளாகத்தில் நினைவுச்சின்னமொன்றைஸ்தாபிக்கும்போது பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பிலான அறிக்கையொன்று, நினைவுத் தூபியை நிர்மாணித்ததற்குரியதான கொள்முதல் கோப்பு மற்றும் அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி மற்றும் நினைவுத் தூபியின் தற்போதைய நிலைமை தொடர்பிலான அறிக்கையொன்று போன்ற விடயங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்தினுள் அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி, தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கத்துக்கு வழிவகுப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் அதனை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறும் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தன. அதனையடுத்து 2021ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டு முழுமைபெறாத நிலையில் இருந்த தூபி இடிக்கப்பட்டது.

தூபி இடிக்கப்பட்டதனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாலும், தமிழ் உணர்வாளர்களாலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஜனவரி 9 முதல் 10 வரை யாழ்ப்பாணத்தில் பெரும் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. அதனையடுத்து 11ஆம் திகதி அதிகாலை மாணவர் பிரதிநிதிகளுக்கும், பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது உரிய அனுமதிகள் பெறப்பட்டு தூபி அமைக்கப்படும் எனத் துணைவேந்தரால் உறுதியளிக்கப்பட்டது.

அதன்பின்னர், நிலைமை தொடர்பில் பல்கலைக்கழகப் பேரவையில் விளக்கமளிக்கப்பட்டு அதற்கான அனுமதி பெறப்பட்டதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், தூபி அமைப்பதற்காகப் பல்கலைக்கழக நிதி பயன்படுத்தப்படுவதில்லை என்று முடிவு செய்யப்பட்டது. தன்னார்வ நன்கொடையாளர்களிடமிருந்து அப்போதைய மாணவர் ஒன்றியத்தினர் சேகரித்த நிதியைப் பயன்படுத்தி தற்போதைய தூபி அமைக்கப்பட்டதுடன், தூபி கட்டப்பட்டதற்கான நிதி விவரங்கள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கணக்கறிக்கையில் காட்டப்பட்டிருந்தது. கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட அந்த அறிக்கை பல்கலைக்கழக நலச் சேவைகள் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-ஒ-5)

## 'மே 18'...

பில் ஆராய்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 3 பேர் கொண்ட குழு ஒன்று நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள 'மே18' நினைவுத்தூபியை அகற்றுவதற்கு கடந்த சில ஆண்டுகளாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பல தடவைகள் இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் பல்கலைக்கழகச் சமூகத்தினர் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக அவை பயனளிக்கவில்லை.

தற்போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரும், விசுவமடு மற்றும் கட்டுடையைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்தப்படும் இருவரும் மேற்கொண்ட முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தூபியை அகற்றுவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய முறைப்பாடுகளை விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவுக்கு கடந்த 19ஆம் திகதி அழைக்கப்பட்டிருந்தார்.

இந்தத் தூபியை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட நிதி மற்றும் பெறப்பட்ட அனுமதிகள் தொடர்பாகவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் விசாரணைகள் நடைபெற்றிருந்தன.

தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 3 பேர் கொண்ட குழு ஒன்று இந்தத் தூபியை ஆராய்வதற்காகஇங்குவரவுள்ளதுஎன்றுஆணைக்குழு வட்டாரங்களில் இருந்து அறிய முடிந்தது. இந்தக் குழு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு வந்து, அங்குள்ள தூபியை நேரடியாக ஆராய்ந்து அறிக்கையிடவுள்ளது என்றும் தெரிகின்றது.

இந்தத் தூபி 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி அழுத்தங்கள் காரணமாக இடித்து அழிக்கப்பட்டது. அதையடுத்து எழுந்த கடும் எதிர்ப்புக் காரணமாக மீண்டும் அந்த இடத்தில் தூபி அமைக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் தூபியை அமைப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எவ்வித எதிர்ப்பையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-26)

## சிங்கள...

உள்ள சிற்றூழியர் பதவி வெற்றிடங்களுக்குப் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பலநோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களப் பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமைய இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிய முடிகின்றது.

அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் வெற்றிடங்களுக்குப் பல்பணி மேம்பாட்டு உதவியாளர்களை வழங்குதல் என்ற தலைப்பின் கீழ் பல்கலைக்கழகங்களில் உள்ள பதவி வெற்றிடங்களுக்காக நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 139 பேர் நியமனத்துக்குத் தகுதி பெற்றவர்கள்எனப்பட்டியலிடப்பட்டுள்ளநிலையில், பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த - மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்த -7 பேர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நேர்காணல் மற்றும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்றும், அதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் - அழுத்தம் கொடுக்கும் வகையில் - அறிவுறுத்தப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து பலர் தொழில் வாய்ப்புக்காக விண்ணப்பத்திருக்கும் நிலையில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், பல்வேறு சந்தேகங்களையும் உண்டாக்கியுள்ளது. (அ-எ-26)

## காணாமல்...

செய்யப்பட்டுள்ளனர். வவுனியா நகரசபை உள்ளக மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்துக்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அண்மையில் அதிலிருந்து பிரிந்து புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அந்தச் சங்கத்திலிருந்து வெளியேறிய அணியினரை வைத்து வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் வவுனியா மாவட்டத்துக்கான இன்னுமோர் நிர்வாகத் தெரிவை மேற்கொள்வதற்காகக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர்.

இந்நிலையில் கூட்டத்துக்கு வருகை தந்த வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க உறுப்பினர்கள் மற்றும் வவுனியாவில் அண்மையில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்துக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது.

பாதிக்கப்பட்ட தாய்மார் தமக்குள் கைகலப்பில் ஈடுபட்டனர். இதனையடுத்து வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பை ஏற்படுத்தி தம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக முறையிட்டனர்.

கூட்டம் இடம்பெற்ற இடத்துக்குவருகை தந்த வவுனியா நகரசபை செயலர் மற்றும் உத்தியோகத்தர்கள் கூட்டத்தை நடத்தவிடாது இருபகுதி தாய்மாரையும் அங்கிருந்து வெளியேற்றியிருந்தனர்.

வெளியேறிய இரு பகுதியினரும் வவுனியா பொலிஸ் நிலையம் சென்று தம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்தனர். முறைப்பாடு தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, இரு பகுதியினரும் இணக்கப்பாட்டுக்கு வராமல் ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி குற்றச்சாட்டுகளை முன்வைத்த நிலையில் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (அ-ஒ-18-110)

## ஜனாதிபதி...

காலத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு மாறாக எதிர்காலத்தைப் பற்றியே சிந்திக்கிறோம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பிரதான மண்டபத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நேற்று நடைபெற்ற 'ரீட் மாவத்தையின் நூற்றாண்டு விழா' நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகம் மாற்றம் கண்டுவரும் வேளையில், இந்நாட்டின் பொருளாதாரத்தை நாம் எவ்வாறு மாற்றியமைப்பது என்று சிந்திக்கிறோம். கல்வி முறையிலும் மாற்றம்வேண்டும். இன்று நாட்டிலுள்ள 50-100 பாடசாலைகளுக்குள் போட்டி நிலவுகிறது. அந்த 100 பாடசாலைகளிலும் லண்டன் பாடசாலைகளுக்கு நிகரான தெரிவைக் கொண்ட மாணவர்கள் உருவாக்கப்படுகிறார்கள். எமது உயர்தரப் பரீட்சை இலண்டன் உயர்தரப் பரீட்சையைவிடவும் கடினமானதாக அமைந்திருப்பதே அதற்கான காரணமாகும்.

புதிய பொருளாதாரம், அரசியல் முறைமைகளுடன் நாம் முன்னோக்கிச் செல்லவேண்டும். அனைவரும் ஒன்றுபட்டு புதிய நாட்டைக் கட்டியெழுப்புவோம். நாடாளுமன்றத்திலும் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படுவோம். கட்சி ஜனநாயக அரசியல் வேறுபாடுகளை அவ்வண்ணமே தக்கவைத்துக் கொண்டு அனைவரும் ஒன்றுபடுவோம் - என்றார். (அ-ஒ-இ)

## இன்று...

களில் காணமுடியும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல் துறையின் வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பகுதியளவிலான இந்தச் சந்திர கிரகணம் இலங்கை மட்டுமன்றி ஐரோப்பா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலும் பார்க்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பகுதியளவிலான சந்திர கிரகணத்தில், பூமி சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் வருகிறது. எனினும், அவை நேர்கோட்டை உருவாக்காது. இதன்போது பூமியின் நிழலின் இருண்ட பகுதி நிலவின் மேற்பரப்பின் ஒரு சிறிய பகுதியில் தென்படும் எனக் கூறப்படுகிறது.

இலங்கை நேரப்படி இரவு 11:32 மணிக்கு சந்திரன் பூமியின் சுற்றுப் பாதையில் நுழையும் போது சந்திர கிரகணம் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நான்கு மணித்தியாலங்கள் 25 நிமிடங்கள் நீடிக்கும் இந்தச் சந்திர கிரகணத்தின் முடிவு நாளை அதிகாலை 3.56 மணிக்கு நிகழும் என பேராசிரியர் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெளிநாடு செல்வதற்காக

## பணத்தைக் கொடுத்து ஏமாந்தவர் தவறான முடிவெடுத்து உயிரிழப்பு

பருத்தித்துறை, ஒக். 28

வெளிநாடு செல்வதற்காகப் பணம் கொடுத்து ஏமாந்த மன விரக்தியால் உடுப்பிட்டியில் இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு தவறான முடிவு எடுத்து உயிரைமாய்க்க முற்பட்ட நிலையில் வீட்டாரால் மீட்கப்பட்டு வல்வெட்டித்துறை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு சடலம் கொண்டுவரப்பட்டு, நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணை மேற்கொண்டார்.

இதன்போது உயிரிழந்த இளைஞர் வெளிநாட்டுக்குச் செல்வதற்குப் பணம் கொடுத்திருந்ததாகவும், காதல் தொடர்பான மனக்கவலைகள் இருந்ததாகவும் விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டது. (ஒ-100)

## தையிட்டி விகாரைக்கு எதிர்ப்பு: மக்கள் முன்னணி போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 28

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று வெள்ளிக்கிழமை முதல் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இன்று பௌர்ணமி தினமாகும். ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் தையிட்டி விகாரைக்கு பௌத்த சிங்களவர்கள் வழிபாட்டுக்காக வந்து செல்லும் நிலையில் குறித்த சந்தர்ப்பத்தில் தமிழர்களது எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில், நேற்றுபிற்பகல் 3 மணிக்கு தையிட்டி விகாரைக்கு செல்லும் வீதியோரத்தில் அமர்ந்து போராடத்தை முன்னெடுத்து வருகின்றனர். இப்போராட்டம் இன்று மாலை 6 மணியுடன் முடிவுக்கு வருகிறது.

இப்போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஊடக பேச்சாளர் க.சுகாஷ் மற்றும் அக்கட்சி உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-100)

## பலஸ்தீனருக்கு ஆதரவு இலங்கையருக்கு நன்றி!

### இலங்கைக்கான தூதுவர் நெகிழ்ச்சி

கொழும்பு, ஒக். 28

பலஸ்தீனத்தின் மீது தாக்குதல் நடத்திவரும் இஸ்ரேலுக்கு எதிராகச் சர்வதேச சமூகம் குரல் கொடுக்கவேண்டும். இந்த இக்கட்டான தருணத்தில் இலங்கை மக்கள் பலஸ்தீனத்துடன், இருப்பதற்காக இலங்கைக்கான பலஸ்தீனத் தூதுவர் சுஹைர் தர் சைட் நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்கான பலஸ்தீன தூதரகம் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பலஸ்தீனம் எதிர்கொண்டுள்ள இந்த இக்கட்டான நேரத்தில் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக நிற்கும் இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இலங்கையின் பிரதான ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களும் பலஸ்தீனம் தற்போது எதிர்நோக்கி வரும் நிலைமையைப் புரிந்துகொண்டு செயற்படுகின்றன. இஸ்ரேல்-பலஸ்தீன மோதல்களுக்கு மத்தியில் உயிரிழந்த இலங்கைப் பெண்ணின் குடும்பத்துக்கு பலஸ்தீன அரசாங்கம் அனுதாபங்களைத் தெரிவிக்கிறது.

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்கள் அனைத்தும் கடுமையான மனித உரிமை மீறல்களாகும். சர்வதேச சமூகம் பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவேண்டும். சர்வதேச சட்டத்தின்படி, இஸ்ரேலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுக்கிறோம்.

தற்போது பலஸ்தீனத்துக்கு எதிராகச் செயற்படும் ஜேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா மற்றும் அமெரிக்கா குறித்து கவலையடைகிறோம். எமது பிராந்தியத்தின் உறுதிப்பாட்டை அழித்து தேசிய வளங்களைக் கொள்ளையடிக்கும் தலையீடுகளை வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றார். (அ-ஒ-இ)

## 12 தமிழக மீனவர்கள்; விளக்கமறியல் நீடிப்பு

### குற்றப்பத்திரம் தாக்கல் செய்யவும் மன்று பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 28

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 12 பேரின் விளக்கமறியலை மேலும் நீடித்து ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து 12 தமிழக மீனவர்கள் கடந்த 14 ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்த 3 படகுகளும் கையகப்படுத்தப்பட்டன.

அவர்களை கடந்த 15 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தியபோது நேற்று வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்தநிலையில் இரண்டாவது முறையாக அவர்கள் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டபோது அவர்கள் மீதான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாததால் அவர்களை எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

இதன்போது குற்றப்பத்திரத்தை மன்றில் தாக்கல் செய்யாது வேண்டுமென்றே விளக்கமறியல் காலத்தை நீடிப்பதற்கு வழிவகுக்கப்படுகிறது.

மீனவர்களுக்கு சிறையில் படுத்துறங்குவதற்கு இடமின்றி குந்தியிருந்தவாறே படுத்துறங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் கண்நோய்ப் பாதிப்புகளும் தாக்குகின்றன என மீனவர்கள் மன்றுரைத்தனர்.

இருதரப்பு விண்ணப்பத்தைக் கேட்டறிந்த நீதிவான், சந்தேகநபர்கள் மீதான குற்றப்பத்திரம் அடுத்த தவணையின் போது தாக்கல் செய்யப்படாதவிடத்து, நீதிமன்றம் சந்தேகநபர்களை விடுதலை செய்யும் என்று உத்தரவிட்டார். (ச-100)

## மாங்கொல்லை வைரவருக்கு 33 வருடத்தின்பின் குடமுழுக்கு

காங்கேசன்துறைமேற்கு, மாங்கொல்லை ஞான வைரவர் ஆலய பாலஸ்தான கும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சிறப்புற இடம்பெற்றது.

விநாயகர் வழிபாட்டுடன் பூஜைகள் ஆரம்பமாகி சுப வேளையில் கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் கடந்த 33 வருட காலம் இந்த ஆலயம் இருந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் ஆலயச் சூழலும், அதனை அண்டிய பிரதேசங்களும் விடுவிக்கப்பட்டன.

அதனையடுத்தே ஆலயம் புனரமைக்கப்பட்டு பாலஸ்தாபன குடமுழுக்கு முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-20)


06 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
அமெரிக்க லொத்தர் இலவச வீசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2024ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
V2 Travels
0768226244
0768226241

மாபெரும் உயர்தரக் கருத்தரங்கு
A/L 2023
A/L தமிழ்
ஆசிரியர்:
திரு.N.சத்தியவேந்தன்
B.A (Hons), Mphil (Tamil)
ஆரம்பம் - 30.10.2023
திங்கள் 8.00 AM
இடம்: பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி - யாழ்ப்பாணம்.
* 15 நாட்கள் நடைபெறும்.
* எதிர்பார்க்கை வினாவிடைகளுடன் கையேடுகள் வழங்கப்படும்.
* வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
தொடர்புகளுக்கு:
077 3763 511, 077 379 5460

கால்நடைகள் வளர்ப்போருக்கு
இந்தியா மற்றும் சீனாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட பால் கறக்கும் மெசின் (Milking Machine), பால் சேகரிக்கும் கொள்கலன் (Milk Can) 5 லீற்றரில் இருந்து 40 லீற்றர் வரையான அளவுகளில் சில்வர் (SS304) மற்றும் அலுமினியத்தினாலானவை எம்மிடம் நியாயமான விலையில் உத்தரவாத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
ஆர்க் என்ரபிறைசஸ்
102, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020
எழுதுமட்டுவாள் A9, வீதி. 070 191 3571
Hotline: 071 535 7799 / 071 973 9917










இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org